முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.1337/2019 பெயர் : ஜெயபிரகாஷ் நாள் : 11.06.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள வீடு எனது சொந்த வீடு ஆகும். மேற்படி வீடு பூர்வீக சொத்து ஆகும். நான் விவசாயம் செய்து வருகிறேன், மேலும் வாடகையின் மூலம் வருமானம் பெற்று வருகிறேன், மேலும் மாவு மில் வைத்துள்ளேன். மேற்படி வருமானம் பெறுவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை, தேவைப்பட்டால், தாக்கல் செய்கிறேன். நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஈரோடு ஆர்ட்ஸ் காலேஜ் கிளையில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளேன். நான் வருமான வரி 2015-ல் இருந்து செலுத்தி வருகிறேன். என்னுடைய வருமான வரி கணக்குகளை ஆடிட்டர் தேவ்பிரசாத், கச்சேரி வீதி, மரப்பாலம், ஈரோடு என்பவர் பார்த்து வருகிறார். 2015-ம் வருடத்திலிருந்து தற்போது வரை உள்ள வருமான வரி கணக்குகளை நீதிமன்றத்தில் அடுத்து வரும் வாய்தாவில் தாக்க செய்ய இயலுமா என்றால், இயலும். எனது வீட்டில் வேறு யாரும் எந்த தொழிலும் செய்யவில்லை, எனது வருமானம் மட்டும் தான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)